සිවිල් සහ ව්‍යවස්ථා අංශය
මැතිවරණ කොමිෂන් සභාව
09 SEP 2019

(122)
a

# ஈரோஸ் அமைப்பு
## யாப்பு

பெயர் :

(அ) **பெயர்** : ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்)
EELAM REVOLUTIONERY ORGANIZATION (EROS)

(ஆ) **அமைவிடம்** : ஈரோஸ் அமைப்பின் பணிமனை பொதுக் குழு முடிவு செய்யும் இடத்தில் அமையும்.

2. **அடிப்படைக் கோட்பாடு**

இலங்கையில் வாழ் ஈழவரின் (தமிழ் பேசும் மக்கள்) சமூக, அரசியல், பொருளாதார மேம்பாட்டின் அடிப்படையில் ஓர் சமத்துவ சமதர்ம சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்.

3. **இலக்குகள்**

(அ) இனம், மதம், வர்க்கம், சாதி, பால் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட பாகுபாடுகளையும், அடக்குமுறைகளையும், ஒடுக்குமுறைகளையும் நீக்குதல்.

(ஆ) ஈழவரின் இறைமை, ஒருமைப்பாடு, ஐக்கியம் என்பவற்றைக் கட்டியெழுப்புதல்.

(இ) ஈழவரின் அடிப்படை அரசியல் விழிப்புணர்வை தட்டியெழுப்பி அரசியல் ரீதியாக அணி திரட்டல்.

(ஈ) ஈழவரின் ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டுவதற்காக செயலூக்கமான நேரிய அரசியல் வெகுஜன செயற்பாடுகளில் ஈடுபட்டு மக்களை அணிதிரட்டல்.

(உ) ஈரோஸ் அமைப்பு தனக்குரித்தான கட்சி அரசியலில் தனித்தோ அல்லது ஏனைய கட்சிகளுடன் கூட்டிணைந்தோ தேவையை உணர்ந்து செயல்படும்.

4. **உறுப்புரிமை**

(அ) 16 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் அமைப்பின் உறுப்புரிமையை பெற்றுக் கொள்ள தகுதியுடையவர்களாவர்.

(ஆ) உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் யாவும் பொதுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட படிவத்தில் எழுத்து மூலம் அமைப்பின் ஊரகக்குழு, பிராந்தியக்குழு ஊடாக அமைப்பின் பொதுச் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(இ) உறுப்புரிமை கோரி செய்யப்படும் விண்ணப்பம் பூரணமாக பூர்த்தி செய்யப்படாதவிடத்து பொதுக் குழு காரணம் எதுவும் காட்டாமல் செயலாளர் ஊடாக நிராகரிக்கலாம்.

(ஈ) பொதுக் குழுவில் உள்ள ஐவர் கொண்ட குழு விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும் அதிகாரம் கொண்டது.

(உ) இக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உறுப்பினர்களுக்கு உறுப்புரிமை அடையாள அட்டை வழங்கப்படும்.

(ஊ) உறுப்பினராக ஏற்றுக்கொள்ளப்படும் ஒருவர் அமைப்பின் விதிகளுக்கும், முடிவுகளுக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.

(எ) இவ் அமைப்பின் உறுப்பினர் எவரும் வேறு எந்த கட்சியிலும் உறுப்பினராக இருக்க முடியாது.

(ஏ) கட்சியில் உறுப்புரிமை பெறும் புதிய உறுப்பினர்கள், வேறு அரசியல் கட்சியில் இருந்தவர்கள், வேறு சிறு குழுவில் இருந்தவர்கள், எமது கொள்கைக்கு முரணாக கடந்த காலங்களில் செயல்பட்டவர்கள் எமது கட்சியின் உறுப்புரிமைக்கு

விண்ணப்பித்தால் அவ் விண்ணப்பத்தை ஏற்பதா? அல்லது நிராகரிப்பதா? அல்லது நிபந்னைகளுடன் உறுப்புரிமை வழங்குவதா? என்பதன் இறுதித் தீர்மானத்தை பொதுக்குழுவே எடுக்கும். இம்முறைகள் ஊடாக உறுப்புரிமை பெற்றவர்கள் மூன்று வருடங்களுக்குள் பிராந்திய குழுவில் தலைவர், செயலாளர், பொருளார் மற்றும் பொதுக்குழு உறுப்பினராக நேரடியாக உள்வாங்காது ஏனைய ஊரகக்குழு, பிரதேசக்குழு(DC) ஆகிய குழுக்களில் பொருத்தமான பதவிகளுக்கு நியமிக்கப்படலாம். பிராந்தியக்குழுவில்(RC) தலைவர், உபதலைவர், செயலாளர், உபசெயலாளர், பொருளாா் தவிர்ந்த பொருத்தமான பதவிகளுக்கும் நியமித்து குறைந்தது மூன்று வருடங்கள் அவருடைய செயற்பாடுகளை கண்காணித்து திருப்தியிருந்தால் ஏனைய பதவிகளுக்கு ஒழுங்கு முறைகள் ஊடாக நியமிக்கலாம்.

5. **உறுப்பினரின் கடமைகள்**

(அ) அமைப்பின் யாப்புக்கும், கொள்கைகளுக்கும், வேலைத்திட்டங்களும் விதிகளுக்கும், நடத்தை ஒழுக்கமுறைகளுக்கும் அமைவாக நடக்க வேண்டும்.

(ஆ) அரசியல் அறிவை வளர்த்துக்கொள்வதற்காக அமைப்பின் கொள்கை கோட்பாடுகள் பற்றிய தெளிவைப் பெற்றிருக்க வேண்டியதுடன் அமைப்பின் பிரசுரங்களையும் ஏனைய பிரசார பொருட்களையும் வாங்குவதுடன், பொதுமக்களிடம் விநியோகிக்கவும் வேண்டும்.

(இ) அமைப்பின் கொள்கைகள், முடிவுகள், வேலைத்திட்டங்களை வகுப்பதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் ஈடுபடல் வேண்டும்.

(ஈ) அமைப்பிற்கு ஒழுங்காக உறுப்புரிமைப்பணம், அன்பளிப்பு அல்லது உதவிப்பணம் போன்றவற்றை வழங்குவதுடன் அமைப்பிற்கான நிதி திரட்டலிலும் ஈடுபடல் வேண்டும். உறுப்புரிமை பணத்தை மாதாந்தமோ, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாதங்களுக்கு வேறு வகையில் பகுதிக் கொடுப்பனவாகவும் செலுத்தலாம். ஆனால் வருடாந்த மாநாட்டிற்கு திகதி அறிவிக்கப்படுவதற்கு முன்பு அவ்வருடத்திற்குரிய அங்கத்துவப் பணத்தையும், உதவிப்பணத்தையும் செலுத்தி இருக்க இல்லாவிட்டால் அவர் உறுப்புரிமையை இழப்பதுடன் மாநாட்டில் பங்குபற்றுவதற்கான தகுதியையும் இழந்தவராவார்.

(உ) அமைப்பிற்கு புதிய உறுப்பினர்களை சேர்ப்பதுடன் அமைப்பை மக்கள் மத்தியில் பலப்படுத்தி மக்களுக்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்குதல்.

6. **உறுப்புரிமை இழப்பு**

(அ) குறித்த வருடத்திற்கான முழு அங்கத்துவப் பணத்தையம், உதவிப்பணத்தையும் வருடாந்த மாநாட்டிற்கான திகதி அறிவிப்பதற்கு முன்னர் செலுத்தி இருக்காவிட்டால்

(ஆ) அடுத்தடுத்து அமைப்புக் கிளைக் கூட்டங்கள் மூன்றிற்கு அறிவித்தலின்றி வருகை தரத் தவறுதல்

(இ) தொடர்ந்தும் தனது பொறுப்புக்களை செய்யத்தவறுதல்

(ஈ) உறுப்பினரின் கடமைகளை செய்யாது தொடர்ந்தும் உதாசீனம் செய்தல்

(உ) அமைப்பின் யாப்பு தீர்மானங்கள், கொள்கைகள், வேலைத்திட்டங்கள், ஒழுக்காற்று விதிகள் என்பவற்றின் எதனையும் மீறல்.

(ஊ) அமைப்பிற்குள் பிளவுகளை ஏற்படுத்தும் வகையில் குழுப்பிரிவுகளை ஏற்படுத்தல், அத்தகைய குழுப்பிரிவில் உறுப்பினராயிருத்தல்.

(எ) அமைப்பை பலவீனப்படுத்தும், சீர்குலைக்கும், அழிக்கும் நோக்கில் செயற்படல்

(ஏ) அமைப்பிற்கும், அதன் உறுப்பினர்களுக்கும் எதிரான பொய்யான கூற்றுக்களை பரப்பல்.

(ஐ) அமைப்பிற்கு வெளியே கட்சிக்கு எதிராக கருத்துக்களை முன்வைத்தல்.

மேற்படி ஒன்று அல்லது பலவற்றை செய்யும் உறுப்பினரின் உறுப்புரிமை நீக்கப்பட்டு அவர் அமைப்பிலிருந்து வெளியேற்றப்படுவார்.

**7. உறுப்புரிமையை நீக்கும் நடவடிக்கை முறைமை**

ஒருவரின் உறுப்புரிமை நீக்கப்பட்டு அவர் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட முன்னர் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(அ) அமைப்பின் உறுப்பினர் ஒருவரிடமிருந்தோ அமைப்பின் ஒரு கிளை அமைப்பிடமிருந்தோ கிடைத்த முறைப்பாட்டின் மீது அல்லது தனது சொந்த அவதானிப்பின் மூலமோ குறிப்பிட்ட உறுப்பினர் பிரிவு 6-இல் கூறப்பட்ட தகைமையீனங்களுக்கு உள்ளாகும்போது அல்லது அமைப்பின் நலன்களுக்கு பாரிய வகையில் பாதிப்பை அல்லது அமைப்பு யாப்பு, நடத்தை ஒழுக்க விதிகள், தீர்மானங்கள், கொள்கைகள், வேலைத்திட்டங்கள் முடிவுகள் என்பவற்றின் எதையாவது மீறும் வகையில் செயற்பட்டுள்ளார் என்று பொதுக்குழு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வுறுப்பினரிடம் அவரின் நடத்தை பற்றி விளக்கம் கோரப்பட வேண்டும். விளக்கமளிக்கத் தவறினாலோ திருப்தியற்ற விளக்கமளித்தாலோ ஒழுக்காற்றுக் குழுவின் விசாரணைக்காக அவ்விடயத்தை பொதுக் குழு பாரப்படுத்த வேண்டும்.

(ஆ) சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு குற்றப்பத்திரத்தைக் கையளித்து ஒழுக்காற்றுக் குழு அவரை விசாரிக்க வேண்டும்.

(இ) தன்னிடம் பாரப்படுத்தப்பட்ட விடயத்தை விசாரித்த பின்பு ஒழுக்காற்றுக்குழு விசாரணை அறிக்கையை பொதுக் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(ஈ) ஒழுக்காற்றுக் குழு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் குறிப்பிட்ட உறுப்பினரை வெளியேற்றுவதா என்பதை பொதுக் குழு தீர்மானிக்கும்.

(உ) பொதுக் குழுவின் முடிவே இறுதியானதும் முற்றுமுடிவானதுமாகும்.

**8. விலகல்**

அமைப்பிலிருந்தோ, அமைப்பினுள் வகிக்கும் அதிகாரபூர்வமான பதவி எதிலுமிருந்தோ விலகவோ அமைப்பிலிருந்து ஓய்வு பெறவோ விரும்பும் உறுப்பினார் ஒருவர் தான் விலகவோ ஓய்வு பெறவோ வேண்டுவதை உரிய கிளைக்கோ அமைப்புச் பொதுக் குழுவுக்கோ தெரிவிக்க வேண்டும். உறுப்பினரின் விலகலையோ, ஓய்வு பெறலையோ பொதுக்குழு ஏற்றுக்கொள்ளுமிடத்து அவ்வுறுப்பினர் அமைப்பின் உறுப்பினராக பதவி வகிப்பவராக இருக்க மாட்டார்.

**9. நிறுவனக் கோட்பாடுகள்**

(அ) சகல உறுப்பினர்களும் அமைப்பின் கிளைகளுக்கும், பொதுக் குழுவிற்கும் கீழ்படிவானவர்களாவர்.

(ஆ) இவ் அமைப்பின் பொதுச் சபையின் தேசிய மாநாடே அதன் அதி உயரிய அங்கமாகும்.

**10. அமைப்பின் கட்டமைப்பு**

(அ) ஊரகக்குழு, பிரதேசக்குழு(DC), பிராந்தியக்குழு(RC), பொதுக்குழு(GC), நிறைவேற்றுக்குழு(EC), பொதுச்சபை(GB) மற்றும் ஆலோசனைக் குழு(CC) ஆகும். ஊரகக்குழு, பிரதேசக்குழு(DC) மற்றும் பிராந்தியக்குழு(RC) ஆகிய சகல நிறுவனக் கட்டமைப்புக்களிலும், நிர்வாகத்திலும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் குறைந்தது 75% ஆனோர் 1990ஆம் ஆண்டிற்கு முன் இணைந்திருந்த உறுப்பினருகளுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

(ஆ) **ஊரகக்குழு**: ஒரு கிராமத்தினை எல்லையாக கொண்டு அமையும். இது தலைவர், துணைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் உட்பட

குறைந்தது 7-15 உறுப்பினர்களை கொண்டிருக்கும். உறுப்பினர் ஒருவர் தான் வாக்காளர் இடாப்பில் பதிவுசெய்யப்பட்ட நிரந்தரமாக வசிக்கும் கிராமத்தின் ஊடாக ஊரகக்குழு, பிரதேசக்குழு(DC), மற்றும் பிராந்தியக்குழு(RC)வில் உறுப்பினராக அங்கம் பெறப்படல் வேண்டும்.

(இ) **பிரதேசக்குழு(DC)**: ஒரு பிரதேச செயலகத்தினை எல்லையாகக் கொண்டு அமையும். ஊரகக் கிளைகளின் குழுக்கள் பிரதேச குழுக்களை தெரிவு செய்யும். இது தலைவர், துணைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் உட்பட குறைந்தது 15 உறுப்பினர்களை கொண்டிருக்கும்.

(ஈ) **பிராந்தியக் குழு(RC)**: இது ஒரு மாவட்டத்தினை எல்லையாக கொண்டு அமையும். பிரதேசக் கிளைகளின் குழுக்கள் பிராந்திய குழுக்களை தெரிவு செய்யும். இது தலைவர், துணைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் உட்பட குறைந்தது 15 உறுப்பினர்களை கொண்டிருக்கும். இக்குழுவிலிருந்து தலைவர், துணைத் தலைவர், செயலாளர், பொருளாளர ஆகிய நான்கு பேரும் பொதுக்குழுவின் பிராந்தியக்குழு பிரதிநிதிகளாக பொதுக்குழுவில் இடம்பெறுவார்கள். இத்தெரிவு யாப்பின் 4-ஏ இற்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

(ஈ) **பொதுக்குழு**: இது வடக்கு கிழக்கு மலையகப் பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்டு அமையும். ஒவ்வொரு பிராந்தியக்குழுவிலிருந்தும் தலைவர், துணைத் தலைவர், செயலாளர், பொருளாளர ஆகிய நான்கு பேரும் பொதுக்குழுவின் பிராந்தியக்குழு பிரதிநிதிகளாக பொதுக்குழுவில் இடம்பெறுவார்கள். இத்தெரிவு யாப்பின் 4-ஏ இற்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

(ஊ) <u>நிறைவேற்றுக்குழு</u>:

**(a)**இது தலைவர், உப தலைவர், பொதுச் செயலாளர், பிரதிச் செயலாளர், பொருளாளர் என்போர் நிறைவேற்றுக் குழுவில் பதவிவழி நிறைவேற்று அதிகாரம் உடையவர்களாக இருப்பார்கள். ஏனைய பிற நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களை பொதுக்குழு தெரிவு செய்யும். இத் தெரிவுகள் பிரதேசவாரி, துறைசார்ந்த அடிப்படையில் இல்லாமல் கட்சியின் பணியில் முன்நின்று வினைத்திறனுடன் செயற்படக்கூடிய, தந்திரோபாய மூலோபாய திட்டங்களை வகுத்து எமது தோழர்களையும் மக்களையும் அணிதிரட்டி முன்னெடுக்கக்கூடிய அறிவு, அனுபவம் மற்றும் சமுகவிரோத குற்றச்சாட்டுகள், நிதிமோசடி மற்றும் இலஞ்ச ஊழல்கள் இல்லாத வெளிப்படைத் தன்மையுள்ள பொதுக் குழு உறுப்பினர்களை தெரிவுசெய்தல் வேண்டும். நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களின் ஆகக் கூடிய எண்ணிக்கை ஒன்பது ஆக இருக்கும்.

**(b)**இக் குழு இரண்டு பொதுக்குழு கூட்டங்களுக்குட்பட்ட காலத்தில் கட்சி அரசியல் சம்பந்தப்பட்ட அவசர, அவசிய முடிவுகளை எடுக்கும் அதிகாரம் உண்டு.

(c)கட்சியின் சகல அவசர தீர்மானங்களும், செயற்பாடுகளும் பெரும்பான்மையான நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(d) அவசரமான முடிவுகள் எடுக்கப்படவேண்டுமானால் உடனடியாக நிறைவேற்றுக் குழு கூடி முடிவெடுக்கும்.

(e) நிறைவேற்றுக்குழு மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்படல் வேண்டும்.

(f) பொறுப்புக்களுக்கான விசேட துறைசார்ந்த உப குழுக்களின் கடமைகள், பதவிநிலை உத்தியோகத்தர்களான தலைவர், உப தலைவர், பொதுச் செயலாளர், பிரதிச் செயலாளர், பொருளாளரின் கடமைகள் மற்றும் பொதுக்குழுவின் தீர்மானங்களை செயற்படுத்துதல் போன்ற சகலதையும் வழிப்படுத்தல், கண்காணித்தல் , மேற்பார்வை செய்தல் , மற்றும் ஆலோசனை வழங்கல்கள் போன்ற நெறிப்படுத்தலை நிறைவேற்று குழு நிறைவேற்றுக்குழுவிலுள்ள மூவரை குழுவாக தெரிவு செய்து இக்குழு மூலம் செய்யும். இம்மூவரில் பொதுச் செயலாளர் மற்றும் குழுச்செயலளர்களை தவிர்த்தல் ஆரோக்கியமாக இருக்கும். இக்குழு பொறுப்புக்களுக்கான விசேட துறைசார்ந்த உப குழுக்கள் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் பிராந்தியக் குழுவின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான கடமைப்பட்டியல்களையும் வழங்கும்.

**(எ) பொதுச்சபை:** இது வடக்கு கிழக்கு மாகாணம் மற்றும் மலையகப் பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்டு இப்பிரதேசத்திலுள்ள பிராந்திக்குழுக்களிலிருந்து தலா 15 உறுப்பினர்களை கொண்டதாக அமையும். இத்தேசிய மாநாடு பதவிநிலை உத்தியோகத்தர்களான தலைவர், உப தலைவர், பொதுச் செயலாளர், பிரதிச் செயலாளர், பொருளாளர் ஆகிய உறுப்பினர்களைத் தெரிவு செய்யும். இதுவே அமைப்பின் உயரிய பீடமாக இருப்பதுடன், வருடாந்த தேசிய மாநாட்டையும் நடாத்தும்.

**(ஏ) பொதுக் குழு**

(அ) பொது குழு உறுப்பினர்கள் தலா பிராந்தியத்திற்கு எத்தனை உறுப்பினர்கள் என்ற வரையறையுடன் அவ் எண்ணிக்கைக்குரிய பிரதிநிதிகளைப் பிராந்திக்குழு தலைவர், துணைத் தலைவர், செயலாளர், உபசெயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளிருந்து தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்கள் பொதுக்குழுவின் பிராந்தியக்குழு பிரதிநிதிகளாக பொதுக்குழுவில் இடம்பெறுவார்கள். இத்தெரிவுகள் **யாப்பின் 4-ஏ இற்கு அமைவாக** இருத்தல் வேண்டும். இத்தெரிவுகளுக்கு குறைந்தது கட்சியில் 3 வருடங்கள் செயல்பட்டிருப்பதுடன் கட்சி சீரான வளர்ச்சிக்கட்டத்தை தாண்டும் வரையும் 1990ஆம் ஆண்டிற்கு முன் இணைந்திருந்த உறுப்பினர்களை தெரிவு செய்தல் வேண்டும். பொதுக்குழுவில் குறைந்தது 40 பேர் இடம் பெறுவர். இதற்கு மேலதிகமாக சிறப்புத் துறைசாரந்தவர்கள் அல்லது எமது மூத்த உறுப்பினர்களைக் கௌரவிப்பதற்காக குறைந்தது 5 போர் இடம்பெறுவர்.
(ஆ) பொது குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடுதல் வேண்டும்.

(இ) பொதுச் செயலாளர்ா் பொது குழு கூட்டங்களின் காலம், இடம், நிகழ்ச்சி நிரல் போன்றவற்றை பொதுக்குழு உறுப்பினர்களுக்கு அறிவிப்பார். பொது குழு கூட்டத்தை கூட்டத்தவறின் பொது குழு உறுப்பினர்களில் மூன்றில் இரு பங்கிற்கு குறையாதோர் பொது குழு கூட்டத்தைக் கூட்டலாம்.

(ஈ) குறிப்பான தேவைகளுக்கென பொதுக் குழு துணைக்குழுக்களை நியமிக்கலாம். இவ் துணை அமைப்புக்கள் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே இயங்கும்.

## 12. அமைப்பின் பொதுச்சபைக் கூட்டம்

(அ) அமைப்பினுடைய பொதுச்சபையானது அமைப்பின் முழு இலங்கைக்குமான அதியுயர் அமைப்பாகும். இது அமைப்பின் கருத்தியல், அரசியல் வேலைத்திட்டங்கள் மற்றும் நிறுவனம் சம்பந்தமான அனைத்து விடயங்ளையும் தீர்மானிக்கும்.

(ஆ) பொதுச்சபை வருடாந்தம் கூட்டப்பட வேண்டும். அது நிகழவுள்ள காலத்திற்கு முன்பும் கூட்டலாம் அல்லது பிற்போடப்படலாம்.

(இ) அமைப்பின் மொத்த உறுப்பினர்ளில் 50 சதவீதமானோரை பிரதிநிதித்துவப்படுத்தும் ஊரகக்குழு, பிரதேசக்குழு(DC), மற்றும் பிராந்தியக்குழு(RC), க்களின் வேண்டுகோளுக்கிணங்க பொது குழு பொதுச்சபையைக் கூட்டலாம்.

(ஈ) ஊரகக்குழு, பிரதேசக்குழு(DC), பிராந்தியக்குழு(RC), கிளைகளின் குழுக்களிலிருந்து மாநாட்டிற்கு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர்.

(உ) அமைப்பின் வேலைத்திட்டம், யாப்பு இன்னும் பிற ஆவணங்களைச் சமர்ப்பித்தல், மாற்றுதல், புனராய்ந்து திருத்துதல்.
(ஊ) அமைப்பின் அரசியல், நிறுவன, நிதி அறிக்கைகளை கலந்துரையாடி ஏற்றல்.

(எ) அமைப்பின் உத்தியோகத்தர்களை பொதுச்சபை தெரிவு செய்யும். ஏனைய குழுக்களை பொது குழு தெரிவுசெய்யும்.

(ஏ) பொதுச்சபைக் கூட்டத்தில் முன் கூட்டியே சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள், ஆலோசனைகள், பிரச்சனைகள் மற்றும் இன்னபிற விடயங்களை கவனத்தில் எடுத்து முடிவு காணல்.

(ஐ) உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய உறுப்புரிமைக் கட்டணத்தையும், அன்பளிப்புத் தொகையையும் தீர்மானித்தல.
(ஒ) வெளிநாட்டு விவகாரங்களுக்கு பொறுப்பாக மூவர் கொண்ட குழு நியமிக்கப்படும்.

13 கட்சி உத்தியோகத்தர்கள்
தலைவர், உப தலைவர், பொதுச் செயலாளர், பிரதி செயலாளர், பொருளாளர், உதவி செயலாளர்கள்(குழு), நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் என்போர் கட்சியின் உத்தியோகத்தர்களாவர்.

(அ) தலைவர்:

கட்சியின் பொதுக்குழுவால் அல்லது பொதுச்சபையால் தலைவர் தெரிவு செய்யப்பட்டு அத் தலைவரால் கட்சி பிரதிநிதித்துவப் படுத்தப்படும்.

(ஆ) பொதுச் செயலாளர்

(i) கட்சியின் பொறுப்புக்களுக்கான விசேட துறைசார்ந்த உப குழுக்களின் செயற்பாடுகளை வழிப்படுத்தல், கண்காணித்தல் , மேற்பார்வை செய்தல் , முன்னெடுத்தல் மற்றும் ஆலோசனை வழங்கல்கள் போன்றவை பொதுச் செயலாளரின் கடமையாவதுடன் இவ் உப குழுக்களின் பொறப்புக்களுக்கும் சகல நிர்வாகங்களுக்கும் பொறுப்பாவார்.

(ii) கட்சியின் சார்பில் பேசவும், அறிக்கைகளை விடுக்கவும் உரிமை உண்டு.

(iii) தேர்தல் சட்டங்களின் கீழும், ஏயை சட்டங்களின் கீழும் அரசியல் கட்சியொன்றின் பொதுச் செயலாளர் என்ற ரீதியில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளுக்கு பொறுப்பாவார்.

(iv) நிறைவேற்று பொதுச் செயலாளர் கட்சியின் தலைமை நிர்வாகி ஆவார். பொதுக்குழு, நிறைவேற்றுக்குழு என்பவற்றின் தலைமை ஆவதுடன் அவற்றின் கூட்டங்களுக்கும் தலைமை வகிப்பார். எமது கட்சியின் நிறுவனக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் உரிமையும் இவருக்கு உண்டு.

(v) கட்சியின் சகல நிறுவனங்களுக்கும் தேசிய, சர்வதேச விவகாரங்களுக்கும் நிறைவேற்று பொதுச் செயலாளர் பொறுப்பாவதுடன் கட்சியின் சார்பில் பேசவும், அறிக்கை விடவும் அவருக்கு அதிகாரமும், உரிமையும் உண்டு.

(vi) கட்சியினதும் கட்சி சார்பான ஆவணங்களிலும் ஒப்பமிட நிறைவேற்று பொதுச் செயலாளருக்கு உரிமையுண்டு. கட்சியினுடனான கொடுக்கல், வாங்கல்கள், சொத்து வாங்குதல், விற்றல் போன்றவற்றுக்கு பொறுப்பாக இருப்பதுடன் அது தொடர்பாக பொதுக்குழுவின் அனுமதியுடன் ஆவணங்களில் கையொப்பமிடும் அதிகாரமும் நிறைவேற்று பொதுச் செயலாளருக்கு உண்டு.

(vii) இவற்றைத் தவிர அவ்வப்போது நிறைவேற்றுச் பொதுச் செயலாளரின் அதிகாரங்களையும் கடமைகளையும் உரிமைகளையும் பொதுக்குழு தீர்மானிக்கும்.

(இ) பிரதி செயலாளர்

1) இவர் அரசியல், சமூக, பொருளாதார, கலை, கலாச்சார, பண்பாட்டு உறுப்பினர்களின் பாதுகாப்பு, மற்றும் திட்டமிடலுக்கு பொறுப்பாக இருப்பதுடன் கட்சியின் தேசிய அரசியல், சர்வதேச அரசியல் மற்றும் தொடர்புகள் என்பவற்றுடன் தாபன கொள்கைகள், வேலைத் திட்டங்களையும் ஒருங்கிணைப்பார்.

2) பொதுச் செயலாளர் இல்லாதவிடத்து பொதுக் குழுவின் பணிப்பிற்கிணங்க பொதுச் செயலாளருக்குப் பதிலாக பதில் கடமையாற்றும் உரிமை இவருக்கு எண்டு. அத்துடன் இவர் பொதுச் செயலாளருக்கு உதவியாக கடமையாற்றுவார்.

(ஈ) பொருளாளர்

1) இவர் நிதி தொடர்பான நடவடிக்கைகளுக்கு பொதுக் குழுவின் வழிகாட்டலின் கீழ் கட்சியின் நிதியை முகாமைப்படுத்தும் பொறுப்பாளராக இருப்பார்.

2) கட்சி நிதியின் வங்கிக்கணக்கு, பொதுச் செயலாளர், பிரதிச் செயலாளர், பொருளாளர் ஆகியோர் பொறுப்பில் இருக்கும், காசோலைகளுக்கு மேற்கண்ட மூவரில் எவராயினும் இருவர் கையெழுத்திடுவர்.

3) நிதி பற்றிய கணக்குப் பரிசீலனை மாதமொருமுறை நிறைவேற்றுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டு பொதுக் குழுவின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டு பொதுக் குழுவின் அங்கீகாரத்தின் பின்னர் ஏற்றுக்கொள்ளப்படும்.

(உ) உதவிப் பொருளாளர்(இப்பதவி பதவிநிலைக்குள் உள்ளடங்கப்படாது)

உதவிப் பொருளாளர் ஒருவர் பொருளாளருக்கு உதவியாக செயற்படுவார்.

## 14. பொறுப்புக்களுக்கான விசேட துறைசார்ந்த உப குழுக்கள்

(அ) கட்சியின் பொறுப்புக்கள் 1. நிர்வாக மற்றும் அரசியல் குழு, 2. நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி குழு, 3. வெளியீட்டுக் குழு, 4. உறுப்பினர் நலன் பேணும் குழு, 5. கலை, கலாச்சார, பண்பாட்டு குழு, 6. ஆய்வுக் குழு மற்றும் 7. ஆலோசனைக் குழு என 07 குழுக்களாக பிரிக்கப்பட்டடுள்ளது.

(ஆ) இவ் ஒவ்வொரு குழக்களும் 1-5 உறுப்பினர்களை கொண்ட துறைசார்ந்த குழுக்களாக மத்தியகுழுவிற்குள் செயற்படுவதுடன் இக்குழுக்கள் தேவை ஏற்பட்டால் 10-15 பிராந்திய பிரதிநிதிகளை உள்வாங்கி துறைசார்ந்த விரிவுபடுத்தப்பட்ட குழுக்களாக மத்தியகுழுவிற்கு வெளியில் இருந்து செயற்படும்.

(இ) ஒவ்வொரு குழுவிற்கும் இக்குழுவின் துறைசார்ந்த அனுபவம் மற்றும் அறிவுள்ள மத்தியகுழு உறுப்பினர் ஒருவர் குழுச் செயலாளராகவும் 1-4 பேர்கள் உறுப்பினர்களாகவும் தெரிவுசெய்தல் வேண்டும். இத்துடன் தேவை ஏற்பட்டால் ஒவ்வொரு ஆலோசகர்களையும் தெரிவு செய்லாம்.

(ஈ) ஒருவர் ஒன்றுக்க மேற்பட்ட குழுக்களுக்கு செயலாளராக அவருடைய அறிவு, அனுபவத்தினை பொறுத்து தெரிவுசெய்யப்படலாம்.

(உ) இக்குழுக்களுக்குரிய அனுபவம், அறிவு மற்றும் துறைசார்ந்த பொருத்தமான உறுப்பினர்கள் பொதுக்குழுவில் இல்லாதபட்சத்தில் பொதுக்குழுவின் அனுமதியுடன் எமது தோழர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்களில் இருந்து இக்குழுக்களுரிய உறுப்பினர்களை உள்வாங்கமுடியும் ஆனால் இக்குழுக்களுக்குரிய செயலாளராகவோ அல்லது உதவிச் செயலாளராகவோ தெரிவுசெய்யப்படமுடியாது.

(ஊ) பதவிநிலை உத்தியோகத்தர் ஒரு குழவிற்கு குழுச்செயலாளராக தெரிவுசெய்யப்படும் போது அக்குழுவுக்கு அக்குழு உறுப்பினர் ஒருவரை உதவிச் செயலாளராக தெரிவு செய்தல் வேண்டும்.

(எ) இவ் 7 பொறுப்புக்களுக்கான விசேட துறைசார்ந்த உப குழுக்களின் செயற்பாடுகளை வழிப்படுத்தல், கண்காணித்தல் , மேற்பார்வை செய்தல் , முன்னெடுத்தல் மற்றும் ஆலோசனை வழங்கல்கள் போன்றவை பொதுச் செயலாளர், பிரதிச் செயலளர் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்களின் கடமையாகும். இத்துடன் இவ் 7 பொறுப்புக்களுக்கான விசேட துறைசார்ந்த உப குழுக்களையும் ஒருங்கிணைத்து செயற்படுத்துவதற்கு விசேடமாக இணைப்புச் செயலாளர் ஒருவர் அல்லது இணைப்பாளர் ஒருவரை தெரிவு செய்யலாம்.

(ஏ) இவ் 7 பொறுப்புக்களுக்கான விசேட துறைசார்ந்த உப குழுக்களின் கடமைகள்.

1) நிர்வாக மற்றும் அரசியல் குழு

- பொதுக்குழு, நிறைவேற்றுக்குழு மற்றும் மாவட்டக்குழு கூட்டங்களை கூட்டுதல்.
- கட்சி நிறுவனங்களின் கூட்டங்களில் பங்குபற்றுதல்
- கட்சி நிறுவனங்களின் நிர்வாகங்களை மேற்பார்வை செய்தலும் நெறிப்படுத்தலும்.
- அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச மட்டத்திலான அமைப்புக்கள், நாடுகளின் தூதுவர் அலுவலகங்கள் மற்றும் ஏனைய அரசியல் கட்சிகளுடன் உத்தியோகபூர்வமாக பேசுதல் மற்றும் தொடர்புகளை பேணுதல்.
- கட்சி சார்பில் பேசுதல் மற்றும் அறிக்கைகளை விடுதல்.
- கட்சியின் தேசிய அரசியல், சர்வதேச அரசியல், கட்சியின் கொள்கை வகுப்பு.
- அரசில் செயல்திட்டங்களை வகுத்தல்.

2) நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி குழு,

- உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிதி சேகரித்தல்
- பொது நிதியினை கையாளுதல்
- சமூக, பொருளாதார திட்டங்கள்
- வருமானத்தை நோக்கமாக கொண்ட பொருளாதார திட்டங்கள்.

3) வெளியீட்டுக் குழு

- தர்க்கீகம் பத்திரிகை வெளியிடுதல்
- கட்சியின் கொள்கைவிளக்கக் குறிப்புக்களை வெளியிடுதல்.
- தேர்தல் அறிக்கைகள்
- விசேட பத்திரிகை அறிக்கைகள்
- ஆய்வு வெளியீடுகள்

4) உறுப்பினர் நலன் பேணும் குழு

- உறுப்பினர்களை அரசியல் மயப்படுத்தல்.
- உறுப்பினர்களின் பாதுகாப்பு
- உறுப்பினர்களின் பொருளாதார மேம்பாடு

5) கலை, கலாச்சார, பண்பாட்டு குழு

- கலை, கலாச்சார, பண்பாட்டுகளை வளர்த்தல்
- கலாச்சார சீரளிவுகளை தடுப்பதற்கான செயற்திட்டங்கள்
- போதைப் பொருட்களை ஒளிப்பதற்க்கான செயற்திட்டங்கள்

6) ஆய்வுக் குழு

- பயன்படுத்தக்கூடிய வளங்களை ஆய்வின்மூலம் அடையாளம் காணப்படவேண்டும்.
- சூழல் மாசடைதலை தடுப்பதற்க்கான ஆய்வுகள்.

7) ஆலோசனைக் குழு

- கீழ்வரும் குழுக்களுக்கு ஆலோசனைகளை வழங்குதல்.
- 1. நிர்வாக மற்றும் அரசியல் குழு, 2. நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி குழு, 3. வெளியீட்டுக் குழு, 4. உறுப்பினர் நலன் பேணும் குழு, 5. கலை, கலாச்சார, பண்பாட்டு குழு, 6. ஆய்வுக் குழு.

- இவ் 6 குழுக்களுக்கும் அடுத்த கட்டங்களில் தனித்தனி ஆலோசனைக் குழுக்களை அமைத்து விரிவுபடுத்தலாம்.

**15) நிதி**

அ அமைப்பின் சார்பில் அமைப்பின் எல்லாச் சொத்துக்களுக்கும் பொதுச் செயலாளர் பொறுப்பாவர். பொதுக்குழு வருடாந்த வரவு செலவு திட்டத்தை வரைந்து அதற்குரிய நிதியை ஒதுக்கும்.

(ஆ) வரவு செலவு திட்ட, மற்றும் கணக்காய்வு நிதி அறிக்கைகள் பொதுச்சபையில் நிதிப் பொருலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டு அங்கிகரிக்கப்பட வேண்டும்.

(இ) அமைப்பின் பொருளாளர் அமைப்பின் நிதியை முகாமைப்படுத்தப் பொறுப்புடையவராயிருப்பார். கணக்கறிக்கையை நிதிப் பொருளாளர் தயாரிக்க வேண்டும். அவ் அறிக்கை அங்கிகரிக்கப்பட்ட கணக்காய்வாளரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(ஈ) அமைப்பின் நிதி வங்கிக் கணக்குகள் மூலம் நிர்வகிக்கப்படும். வங்கிக் கணக்குகளை பொதுச் செயலாளர்ரும் பொருளாளரும் இயக்குவர். வங்கிக் கணக்குகள் வைத்திருக்கும் வங்கிகளை பொதுக்குழு தீர்மானிக்கும்

(உ) உறுப்பினர்களின் உறுப்புரிமைப்பணம், முதலீடுகள், நன்கொடைகள், நலன்விரும்பிகளதும் நிறுவனங்களினதும் நன்கொடைகள் பகிரங்க நிதி திரட்டல் நிகழ்ச்சிகள், பொதுமக்களின் பங்களிப்பு போன்றவற்றின்மூலம் அமைப்பின் நிதி திரட்டப்படும்.

(ஊ) அமைப்பின் ஏனைய நிறுவனங்களினது நிதியும் வங்கிகக் கணக்குகளும் சம்பந்தப்பட்ட குழுவின் செயலாளர்களினாலும், பொருளாளராலும் பொதுக்குழுவின் வழிகாட்டலின்கீழ் இயக்கப்படும். இச் செயற்பாடுகள் அனைத்துக்கும் பொதுக் குழுவிற்கு வகைகூற வேண்டும்.

(எ) கட்சியின் சகல நிறுவனங்களினது நிதியும், வங்கிக் கணக்குகளும் சம்பந்தப்பட்ட குழுவின் செயலாளராலும், பொருளாளராலும் பொதுக் குழுவின் வழிகாட்டலின் கீழ் இயக்கப்படும். இக் கணக்குகள் அரச நிதிப் பிரமாணங்களில் குறிப்பிடுகின்ற விதி முறைகளுக்கமைவாகப் பேணப்படுவதுடன் நிதிப் பிரமாணங்களுக்கு ஏற்ப வரவு செலவுக்கான ஆவணங்களும் பேணப்படல் வேண்டும்.

**14. அமைப்புக் கலைப்பு**

இவ் அமைப்பை கலைப்பதற்கான முடிவு பொதுச்சபையில் மூன்றில் இரண்டு பகுதி உறுப்பினர்களின் ஆதரவுடன் இடம்பெறல் வேண்டும். இதற்கான விசேட பொதுச்சபைக் கூட்டத்தை மத்தியகுழு கூட்டும்.